<u>சாதாரணக்கூட்டம்</u>

**விளம்பி வருடம் மாசி மாதம் 23ஆம் தேதி 2019ம் வருடம் மார்ச் மாதம் 7ம் தேதி (07.03.2019) வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**<u>பொருள் எண்: 1</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019ம் தேதியிட்ட சுற்றறிக்கை ந.க. எண்.3/159/2018/டி.பி.3ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி எண்.30(1) மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு நகராட்சியிலும் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விபரங்களை தயார் செய்ய தெரிவித்து வரப்பெற்றுள்ள சுற்றறிக்கையின்படி, தயார் செய்யப்பட்டுள்ள பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

**<u>தொடர் கட்டுமான பகுதி (Continuous Building Area)</u>**
<u>மேல அம்பாசமுத்திரம் கிராமம்</u>

1. சர்வே எண்.369/2A1A
2. சர்வே எண்.229/1A1

மேற்கண்ட கிராமங்களில் அடங்கிய சர்வே எண்களின் பட்டியல்படி, தொடர் கட்டுமான பகுதிகள் என பிரசுரம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பலாம்.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 441/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 2</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019ம் தேதியிட்ட சுற்றறிக்கை ந.க. எண்.3/159/2018/டி.பி.3ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி எண்.30(1) மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு நகராட்சியிலும் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விபரங்களை தயார் செய்ய தெரிவித்து வரப்பெற்றுள்ள சுற்றறிக்கையின்படி, தயார் செய்யப்பட்டுள்ள பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

## <u>நலிவடைந்தோர் பகுதி (Economicaly weaker section)</u>

| மேல அம்பாசமுத்திரம் கிராமம் | | சர்வே எண்கள் |
|---|---|---|
| 1 | சுப்பிரமணியபுரம் | 384A, 383B4, 385 |
| 2 | பெரிய குளம் காலனி தெரு | 195,196,197,584,585 |
| **கீழ அம்பாசமுத்திரம் கிராமம்** | | |
| 1 | கோவில் குளம் | 383,384,385,386,387,388,389,390,391,392,393,533, 534,540,541,395,635,636,637,499,500 |
| 2 | முடப்பாலம், அண்ணாநகர் | 344,345,346,347,348 |
| 3 | சோலைபுரம் | 188,189,196,191,192,193,194 |
| 4 | தோணித்துறை | 175 |
| **ஊர்க்காடு கிராமம்** | | 102,106,9,10,102/Pt |

மேற்கண்ட கிராமங்களில் அடங்கிய சர்வே எண்களின் பட்டியல்படி, நலிவடைந்தோர் பகுதிகள் என பிரசுரம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பலாம்.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 442/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 3</u>**

1. அம்பாசமுத்திரம் நகராட்சி எல்கைக்குள் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் அதனை சார்ந்த பிற கட்டமைப்புகளுக்கும் கட்டட உரிமம் வழங்குவதற்கு 01.10.2007முதல் நிர்ணயம் செய்யப்பட்ட உரிம கட்டணங்கள் தற்போதும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டணம் 9 வருட காலமாக உயர்த்தப்படாமல் அதே கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

எனவே, 1920—ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் 5—வது சட்டத்தின் பிரிவுகள் 175,176,183,197,199,200,201,204,207,208,249,250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள், உரிம ஆணைகள், அனுமதிகள் மீதான கட்டணங்களின் மாறுதல்கள், இந்நகராட்சியின் நிதி நிலையை அதிகரிக்கும் பொருட்டு,

அ. திருத்தப்பட்ட 1920—ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321(2)—ன்படி கீழ் கண்டவாறு உரிமக்கட்டணத்தை மாற்றி அமைக்கவும்.

ஆ. மேலே கூறப்பட்ட செயல்களுக்கு நிர்வாக அதிகாரியிடமிருந்து உரிமை ஆணை இல்லாமலும், உரிய கட்டணங்களை செலுத்தாமலும், உரிம ஆணையிலும், துணை சட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்படாமலும் பயன்படுத்தக்கூடாது என்று அறிவிக்கவும்.

இ. மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி நடக்காமல் யாரேனும் மேற்படி விதிகளை மீறினால் திருத்தப்பட்ட 1920—ம் ஆண்டின் மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 308(எ) மற்றும் (பி) பிரிவுகளின்படி தண்டனைக்குள்ளாவார்கள் என்று அறிவிக்கவும்,

ஈ. அரசாணை நிலை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (MAI) துறை நாள்:04.02.2019 ,தமிழ்நாடு அரசிதழ் எண்.43 நாள்.04.02.2019–ஆகியவற்றில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட **அபிவிருத்தி** மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி விதியில் 04.02.2019 முதல் **கட்டிட உரிமம் காலத்தினை** மூன்று ஆண்டு அனுமதி காலம் என இருந்ததை ஐந்து ஆண்டுகளாக மாற்றியுள்ளதால் 04.02.2019 முதல் கட்டண விகிதங்கள் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்திட அவசியம் எழுந்துள்ளது.

உ. எனவே நிலையில் உள்ள கட்டண விகிதத்தில் தேவையான திருத்தங்கள் செய்து திருத்திய கட்டணம் மற்றும் உரிம கால விவரங்கள் குறிப்பிட்டு கீழ்கண்டவாறு திருத்தியமைக்க மன்ற அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி களின் சட்டம், 1920–இன் பிரிவு | கட்டிட உரிமங்களின் விவரங்கள் | தற்போது நகராட்சியில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் கட்டண விவரம் | | | திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமங்களின் கட்டண விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **அளவு** | காலம் | **தொகை ரூ.** | **அளவு** | காலம் | **தொகை ரூ.** |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | | | **7** |
| 1 | 175, 176,177 | (1) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பிற்கு) | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | – | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 5,000.00 |
| | | (2) தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் (குடியிருப்பு அல்லாத இனங்களுக்கு) | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | – | ஒரு ஹெக்டேர் மற்றும் அதன் பாகம் | ஒரு முறை | 10,000.00 |
| 2 | 197(1)(அ) | 1.மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு மனை) | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | – | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 300.00 |
| | | | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 500.00 |
| | | 2. மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு அல்லாத மனை) | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | – | 300 சதுர மீட்டருக்கு உட்பட்டு | ஒரு முறை | 600.00 |
| | | | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | – | 300 சதுர மீட்டருக்கு மேல் | ஒரு முறை | 1000.00 |
| 3 | 197 (1), 175 முதல் 177 | (அ) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனைகள் ஒருங்கிணைப்பு அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம். | ஒவ்வொரு மனைக்கும் | ஒரு முறை | – | ஒவ்வொரு மனைக்கும் | ஒரு முறை | 500.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (ஆ)அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம் | – | – | – | ஒரு முறை | ஒரு முறை | 20,000.00 |
| 4 | 197, 201, 215 | (1) மட்டப்பா கட்டிடம், கான்கிரீட் கூரை கட்டிடம், புதியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல் கூடுதல் கட்டுதல், மாறுதல் செய்தல் (கட்டுமானம் ஒரு பகுதி / ஒரு பகுதி ஆஸ்பெஸ்டாஸ் தகடு /தகரக் கட்டடமாகவும், ஒரு பகுதி மட்டப்பா கான்கிரீட் கூரை கட்டடமாகவும் இருப்பின் முழு மட்டப்பா கட்டடத்திற்குரிய கட்டண விகிதங்கள் அனுசரிக்கப்பட வேண்டும்) | | | | | | |
| | | **குடியிருப்பு கட்டிடங்களுக்கு:–** | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரை தளம் | ஒவ்வொரு 200 சதுர அடிவரை | மூன்று ஆண்டு காலத்திற்கு | 50 | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | | 200 சதுர அடிக்கு மேல் ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 100 | | | |
| | | | மட்டப்பா கட்டுடன் கீழ்பகுதி மட்டும் முதல் 200 சதுர அடிக்கு | மூன்று ஆண்டு காலத்திற்கு | 600 | | | |
| | | | அடுத்த ஒவ்வொரு 100 சதுர அடிக்கு 1000 சதுர அடி வரை | மூன்று ஆண்டு காலத்திற்கு | 200 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1000 சதுர அடிக்கு மேற்பட்ட ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 300 | | | |
| | | (ஆ) முதல் தள கட்டிடம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 250.00 |
| | | (இ) இரண்டாம் தள கட்டிடம் அதற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 350.00 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு–** | | | | | | |
| | | (அ) தரைகீழ் தளம் மற்றும் தரைதளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 350.00 |
| | | (ஆ) முதல் தளம் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | (இ) இரண்டாம் தள கட்டிடம் அதற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 650.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | திட்ட அனுமதி, கட்டிட அனுமதி புதுப்பிக்க (அனுமதிகாலத்திற்குள்) | – | – | **கட்டிட அனுமதி கட்டணத்தில் அமைப்பு ஒப்புதல் கட்டணம் தரை இதர** | ஒருமுறை மட்டும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | கட்டிட **அனுமதி மற்றும் அபிவிருத்தி** அனுமதிக் கட்டணத்தில் 100 சதவீதம் |
| 6 | 197 | (அ) பழைய கட்டிடங்களை இடித்து அகற்றுவதற்கு | – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஒரு முறை | 50.00 |
| | | (ஆ)தெரு ஓரங்களில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டிட கட்டுமான பொருட்கள் சேமித்து வைப்பதற்கு | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | **ஒரு வாரம்** | – | – | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிட அனுமதி கட்டணத் தொகையில் 75 சதவீதம் |
| 7 | 183(2) | (அ) வேணல் பந்தல் அமைக்க | ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மார்ச் முதல் ஜூ**லை** முடிய | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | மார்ச் முதல் ஜூன் முடிய | 200.00 |
| | | (ஆ) யாதொரு பொது தெருவிலே வேறு எந்த பொது இடத்திலோ திருமணப் பந்தல் போன்ற தற்காலிக பந்தல் அமைக்க | ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | 7 நாட்கள் | 200.00 |
| | | (இ) கோயில் உற்சவம் அல்லது மத சம்மந்தமான வைபவங்கள் நடக்கும் காலங்களில் தற்காலிக பந்தல் அமைக்க | | | | – | – | **இலவசம்** |
| 8 | 197 மற்றும் 207 | பொது மக்கள் கூடும் சர்க்கஸ், சினிமா, நாடகம், கேளிக்கைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க அனுமதி வழங்க (எளிதில் தீப்பிடிக்காத பொருட்களினால்) | – | – | – | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | 1 மாதம் | 300.00 |
| 9 | 197, 201, 215 | (1) கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றுக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (2) குளியலறை கட்ட | ஒவ்வொன்றுக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | (3) குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றுக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 400.00 |
| | | (4) நச்சுத்தடை தொட்டி கட்ட (செப்டிக் டேங்க்) | ஒவ்வொன்றுக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொன்றுக்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | (5) சுற்றுச்சுவர் 1.50 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டுவதற்கு | ஒவ்வொரு 100 சதுர அடி வரை | மூன்று ஆண்டு காலத்திற்கு | 200.00 | ஒவ்வொரு 10 மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | | அடுத்த ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 100.00 | | | |
| | | (6) மாடிப்படி அமைக்க | ஒவ்வொரு தளத்திற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | – | ஒவ்வொரு தளத்திற்கும் | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| 10 | | கிணறு வெட்ட | ஒவ்வொரு கிணற்றிற்கும் | மூன்று ஆண்டு காலத்திற்கு | 2000.00 | | | 5000.00 |
| 11 | 204 மற்றும் 213 | 1. கட்டிட அனுமதி வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 100.00 | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 200.00 |
| | | 2. கட்டிட அனுமதி உத்தரவு உண்மை நகல் வழங்க | – | – | – | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 200.00 |
| | | 3. மனைப்பிரிவு அனுமதி வரைபடம், முழுமைத் திட்ட வரைபடம்,விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடம் நகல் வழங்குவதற்கு | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | – | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 800.00 |
| | | (4) நகர வரைபட நகல் வழங்க — **சிறியது** / **பெரியது** | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | – / – | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 500.00 A2 Size 400.00 A3 Size |
| | | (5)நில உபயோக சான்று வழங்க | – | – | – | ஒவ்வொன்றுக்கும் | ஒரு முறை | 500.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (6) நகரளவை புலப்பட நகல் வழங்குவதற்கு | ஒவ்வொன்று க்கும் | ஒரு முறை | – | ஒரு புல எண் பகுதி காட்டும் வரை படத்திற்கு | ஒரு முறை | 150.00 |
| | | (7) நகரளவை நில பதிவேடு நகல் வழங்க | ஒவ்வொன்று க்கும் | ஒரு முறை | – | ஒரு முறை | ஒரு முறை | 150.00 |
| | | (8) நகர நில அளவை எல்லைகள் அளந்து காண்பிக்க (நான்குமால் அளவீடு செய்ய) | ஒவ்வொன்று க்கும் | ஒரு அளவை **க்கு** | – | ஒவ்வொரு புல எண்ணி ற்கும் | ஒரு முறை | 300.00 |
| 12 | 186 | (1) பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals) அனுமதி வழங்க மற்றும் புதுப்பிக்க | ஒருவருக்கு | **நிதி ஆண்டி ற்கு** | 1000.00 | ஒருவருக் கு | ஐந்து ஆண்டி ற்கு | 5000.00 |
| | | (2) பதிவு பெற்ற தொழில் வல்லுநர் (Registered Professionals) அனுமதி வழங்குவதற்கு முன் வைப்புத் தொகை | ஒருமுறை | **நிதி ஆண்டி ற்கு** | 1000.00 | ஒரு முறை | – | 5000.00 |
| | | (3) தொலை தொடர்பு கோபுரங்களுக்கு அனுமதி வழங்குதல் | ஒவ்வொன்று க்கும் | ஒரு முறை | – | இனம் ஒன்றிற்கு | ஒரு முறை | 5000.00 |
| | | (4) முன் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு | ஒருமுறை | **மூன் று ஆண்டு கள்** | உரிமையாளை ணத் தொகையில் 100 சதவீதம் | ஒரு முறை | **ஐந்து ஆண் டுகள்** | உரிமையா ணைத் தொகையி ல் 50 சதவீதம் |
| 13 | 215(எ) | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க வைப்புத் தொகை (கட்டமைப்பு அமைக்கப்பட்ட விவரத்தினை அலுவலகத்தில் சமர்ப்பித்தப்பின் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்) | – | - | – | ஒருமுறை | – | 2000.00 |

2. மேற்படி திருத்திய கட்டண விகிதங்களை திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் மற்றும் நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. செலவுத் தொகைக்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 443/அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 4**

அம்பாசமுத்திரம் வட்டம் கீழ அம்பாசமுத்திரம் கிராமம் சர்வே எண்.344/3ல் உள்ள நிலத்தில் இலவச வீட்டுமனை பட்டா வழுங்க ஆட்சேபனை இல்லை என்பதற்கு நகராட்சி தீர்மானம் வழுங்கும்படி தெரிவித்து வரப்பெற்றுள்ள அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க. எண்.ஆ1/1961/18, நாள்.05.10.2018மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு:**

மேற்படி இடமானது கீழ அம்பாசமுத்திரம் கிராம கணக்குகளின்படி, நத்தம் புறம்போக்கு என வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண்ணில் ஏற்கனவே இலவச வீட்டுமனை பட்டா வழுங்கப்பட்டுள்ளது. தற்போது அதே சர்வே எண்ணில் பட்டா வழுங்க ஆட்சேபணை இல்லை என மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண். 444/அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 5**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் 2019–20 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் வகையிலான பொது பராமரிப்பிற்கான மொத்த செலவினம் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | 2018–19 ஆம் ஆண்டின் ஒப்பந்ததாரர் விபரம் |
|---|---|---|
| 1 | கணினி அறை, பொதுப்பிரிவு, பொறியியற் பிரிவு , நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றிற்கு கணினி பிரிண்டர்களின் டோனர் புதிதாக வாங்கவும், ரீபில் செய்யவும், கணினி பிரிண்டர்களின் உதிரி பாகங்கள் வாங்கவும் பழுது பார்க்கவும் மொத்த செலவினம் | PegasusSales& Services |
| 2 | அலுவலக ஈப்பு வாகனங்கள் மற்றும் பொது சுகாதார வாகனங்கள் பழுது மற்றும் பராமரிப்பு செய்தல் தொடர்பான மொத்த செலவினம் | - |
| 3 | டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் செலவினம் | ஓம் சக்தி மகளிர் சுய உதவி குழு |
| 4 | தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் செலவினம் | செல்வ விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு |
| 5 | தினக்கூலி பொது சுகாதார வாகன ஓட்டுநர்களுக்கான ஊதியம் மற்றும் செலவினம் | Velam Humanistic Forse |
| 6 | அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் கொள்முதல் மொத்த செலவினம் | தூத்துக்குடி மாவட்ட ஹை–டெக் கோ–ஆபரேடிவ் பிரிண்டிங் சொசைட்டி, கோவில்பட்டி |

**அலுவலக குறிப்பு:**

வரிசை எண்.1 முதல் 5 வரையிலான செலவினங்களுக்கான ஒப்பந்த காலம் 31.03.2019அன்றுடன் முடிவடைகிறது. இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தல் நடத்தை நெறிமுறைகள்

அமல்படுத்தப்பட இருப்பதால், 2019–2020ற்கான வருடாந்திர டெண்டர் கோர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் செலவினங்களுக்கான ஒப்பந்த காலத்தை மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 445/அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 6**

அம்பாசமுத்திரம் நகராட்சியின் 2019 குடிநீர் வழங்கல் துணை விதிகளில் குடிநீர் கட்டணம், வைப்புத் தொகை மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.28516/2018/குவ–3, நாள்.07.01.2019ன்படி, பொது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறைகளில் திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் வழங்கல் துணை விதிகளை மாவட்ட அரசிதழில் ஆங்கிலம் மற்றும் தமிழில் பிரசுரம் செய்யப்பட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. துணை விதிகள் 15 பக்கங்கள் உள்ளதால் பக்கம் 1க்கு ரூ.2100/– வீதம் மொத்தம் ரூ.31,500/–ஐ திருநெல்வேலி, மாவட்ட கருவூலகத்தில் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 446/அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 7**

அம்பாசமுத்திரம் நகராட்சி குடிநீர் விநியோக பிரிவில் புதிதாக வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு 2019–20 ஆம் ஆண்டிற்கான மேற்பார்வை கட்டண மதிப்பீடு தயார் செய்வதற்கான சாலை பராமரிப்பு கட்டணம் கீழ்க்காணும் விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| **2019–20 ஆம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டணம்** | | | |
|---|---|---|---|
| சாலையின் நீளம் | கருங்கல்லி சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
| 0–30 மீ | 1700 | 3680 | 4240 |
| 30–90 மீ | 2700 | 4650 | 5220 |

| **2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்தம் செய்யப்பட்ட சாலை பராமரிப்பு கட்டணம் (12 MM குடிநீர் இணைப்பு )** | | | |
|---|---|---|---|
| 0–30 மீ | கருங்கல்லி சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
| மேற்பார்வை கட்டணம் | 770 | 770 | 770 |

| | | | |
|---|---|---|---|
| சாலை பராமரிப்பு கட்டணம் | 1700 | 3680 | 4240 |

| **2019–20 ஆம் ஆண்டிற்கான திருத்தம் செய்யப்பட்ட சாலை பராமரிப்பு கட்டணம் (18 MM குடிநீர் இணைப்பு )** | | | |
|---|---|---|---|
| **30–90 மீ** | **கருங்கல்லி சாலை** | **தார் சாலை** | **சிமெண்ட் சாலை** |
| மேற்பார்வை கட்டணம் | 770 | 770 | 770 |
| சாலை பராமரிப்பு கட்டணம் | 2700 | 4650 | 5220 |

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 447/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 8</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சி பொதுப்பிரிவு அலுவலக பணிகள் உபயோகத்திற்கு Scanner ஒன்று மற்றும் பொறியியற் பிரிவிற்கு பிரிண்டர் ஒன்றும் வருடாந்திர ஒப்பந்ததாரர் Cheranmahadevi, Pegasus sales & Services மூலம் புதிதாக வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 448/அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 9**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், **சென்னை** அவர்களது சுற்றறிக்கை R.O.C NO 44555/2013/P3 நாள் 28.02.2019 இன் பட**ியும்**, 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு **நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்** )சட்டம் 12ன் பட**ியும்,(No.12 of 2019 - The Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No 75 dt 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுபுறசுழல் மற்றும் வனத்துறை அரசாணை எண் 84 நாள் 25.06.2018ன் படியும் தமிழக** நகராட்சி **பகுதிகளில் ஒரு தடவை மட்டும்** பயன்படு**த்தப்பட்டு** மற்றும் தூக்கி வீசப்பட **கூடிய** நெகிழியை **தயாரித்தல்**, சேகரித்தல் , வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், **பயன்படுத்துதல்** மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் அம்பாசமுத்திரம் நகராட்சி **பகுதியில் ஒரு தடவை மட்டும்** பயன்படு**த்தப்பட்டு** மற்றும் தூக்கி வீசப்பட **கூடிய** நெகிழியை **தயாரித்தல்**, சேகரித்தல் , வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், **பயன்படுத்துதல்** மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்**தும்** ஏற்கனவே இயற்றப்பட்ட அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 (**திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் எண்** 1 **நாள்** 18.01.2018) இல் கீழ் கண்ட திருத்தங்கள் செய்யவும் ,அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016 **ஆம் ஆண்டு** அம்பாசமுத்திரம் **நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தங்கள்**

| | | |
|---|---|---|
| பிரிவு 3ற்கான திருத்தங்கள் | | 2016 ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதி**களில் 3 ஆம் பிரிவில் 22 ஆம் எண்ணிற்கு பின்பு பின்வரும் சொற்களின் பொருள்கள் சேர்க்கப்படுகின்றது.** |
| | 23 | **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். |
| | 24 | **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில், **சுகாதார** ஆய்வாளர், மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். |
| | 25 | **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். |

| | | |
|---|---|---|
| | 26 | **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**<br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். |
| | 27 | **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு** :<br>I. மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்<br>II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.<br>III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,<br>**IV.** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.<br>**V.** |
| **பிரிவு 4ற்கான திருத்தங்கள்** | | **2016** ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதி**களில் 4 ஆம் பிரிவில் (2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும்** |
| | 2(1) | **பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேகரித்தல் ,வழங்குதல்,கொண்டு செல்லுதல்,விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடைசெய்யப்படுகின்றன.மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்** |
| **பிரிவு 6 ற்கான திருத்தங்கள்** | | **2016** ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதி**களில் 6 ஆம் பிரிவில்** |
| | 2 | **நீக்கம் செய்யப்படுகிறது** |
| | 3 | **நீக்கம் செய்யப்படுகிறது** |
| | 4 | **நீக்கம் செய்யப்படுகிறது** |
| 7ம் பிரிவிற்கான திருத்தங்கள் | | **2016** ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதி**களில் 7 ஆம் பிரிவில்** |
| | (**a**) | **நீக்கம் செய்யப்படுகிறது** |

| | | |
|---|---|---|
| பிரிவு 8 ற்கான திருத்தங்கள் | 8.1 | இந்த **திருத்தப்பட்ட** துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை **I,II** ன் படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். |
| | **8.2** | அட்டவணை **I,II** - ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும |

**2016 ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்டவணை I க்கு பின்பு அட்டவணை II சேர்க்கப்படுகிறது.**

**அட்டவணை II**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**தீர்மான எண். 449/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 10</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், **சென்னை** அவர்களது சுற்றறிக்கை R.O.C NO 2288/P3/2019 நாள் 25.02.2019 இன் படி**யும்**, **திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரிவு 15(a) ன் படியும்** அம்பாசமுத்திரம் **நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமான கொள்கை மற்றும் செயலாக்கத்திட்டம் தயாரித்து (Solid waste management policy and strategy ) அதனை அரசிதழில் வெளியிட வேண்டியிருப்பதால்** அம்பாசமுத்திரம் **நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமான கொள்கை மற்றும் செயலாக்கத்திட்டத்திற்கு மன்ற அனுமதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கொள்கை அனுமதி பெற்று அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

**தீர்மான எண். 450/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 11</u>**

அம்பாசமுத்திரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை ) எண் 37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை (ந.நி.ப) நாள் 13.04.2017 ன் படியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண் ROC/9884/2018 நாள் 13.06.2018 ன்படி வீடுகளிள் தனிநபர் கழிப்பிடம் அமைக்க 1223 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது அதன் படி 1223 விண்ணப்பங்கள் CSC கணினி மையம் மூலம் விண்ணப்ப பதிவு எண் (ID No ) பெற இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்.

**தீர்மான எண். 451/அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்: 12</u>**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி, உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கல் தொடர்பாக தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தல் குறித்த நடைமுறைகளின்படி, நடவடிக்கைகள் மேற்கொள்ள

நகராட்சி ஆணையாளர்களை கேட்டு வரப்பெற்ற சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்.50977/2018/டிபி3, நாள்.07.03.2019 மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 452 / பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்: 13</u>**

அரசாணை( நிலை) எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்இ1) துறை, நாள்.13.02.2013ன்படி, அம்பாசமுத்திரம் நகராட்சியானது மூன்றாம் நிலை நகராட்சியாக செயல்பட்டதை இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டது. நகராட்சியில் இரண்டாம் நிலை அந்தஸ்தில் தோற்றுவிக்கப்பட வேண்டிய கீழ்க்காணும் அத்தியாவசிய பணியிடங்களை புதிதாக தோற்றுவித்திட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | புதிதாக தோற்றுவிக்கப்படவேண்டிய பணியிடத்தின் பெயர் | பணியிடத்தின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் (Municipal Engineer) | 1 |
| 2 | துப்புரவு அலுவலர் (Sanitary Officer) | 1 |
| 3 | கணி னி உதவி திட்ட அலுவலர் (Assistant Programmer) | 1 |

**அலுவலக குறிப்பு:**

அம்பாசமுத்திரம் நகராட்சியானது மேற்காணும் அரசாணையின் படி, இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால், இந்நகராட்சிக்கு தேவையான புதிய பணியிடங்களை தோற்றுவித்திட கருத்துரு சமர்ப்பிக்கும்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.35190/2010/எச்1, நாள்.11.09.2013 மற்றும் 06.01.2014ல் கேட்டுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில், இவ்வலுவலக கடிதம் ந.க. எண்.97/2014/அ1, நாள்.05.03.2014ன்படி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, மேலாளர், வருவாய் ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர், பணி ஆய்வாளர் ஆகிய புதிய பணியிடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மேற்காணும் மூன்று பணியிடங்களையும் நகராட்சியின் அவசர அவசியம் கருதி புதிதாக தோற்றுவித்திட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 453 / அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்:14**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018ஐ தினமணி நாளிதழில் 15.02.2019 அன்று விளம்பரம் செய்த வகைக்கு பில் எண்.TVL TN 60035989, Dated.15.02.2019ன்படி, Express Publications (Madurai) Pvt. Ltd., க்கு பில் தொகை ரூ.**88893/–** வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 454 / அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்:15**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் கோடாரங்குளம் தலைமை நீரேற்று நிலைய பிரதான **300**MM-CI குழாய்கள் புதிதாக மாற்றுதல், Compost Yard, Fecal Sludge Treatment Plant மற்றும் Disposal of Effluents ஆகியவற்றிற்கான அரசு மானியம் பெறுவதற்கான கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்திட தேவையான வரைபடங்கள் Auto Caddல் தயார் செய்து Colour Print கீழ்க்காணும் விபரப்படி எடுத்த வகைக்கு Kallidaikuruchi, Palani Consultancy உரிமையாளர் திரு.வி.பழனிசங்கர் என்பவரது பில்படி தொகை ரூ.**12,300/–** வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>ஒப்புநோக்கு பட்டியல்</u>**

| Sl. No | Particulars | Units | PALANI Consultancy. Kallidaikurichi | EAGLE Planners. Kallidaikurichi | VRL Consultancy Ambasamudram |
|---|---|---|---|---|---|
| 1 | Charges for Preparation of Autocad Drawing.<br><u>De-cetalised waste water system at compost yard</u><br>1) Contour Map<br>2) Contour site sketch | 1<br>1 | Rs.1500/-<br>Rs.1500/- | Rs.1700/-<br>Rs.1700/- | Rs.2000/-<br>Rs.2000/- |
| 2 | Charges for preparation of Autocad Drawing.<br><u>Water Supply Improvement Scheme</u><br>1) L.S Pumping line (Kodarankulam pump to Subramaniyapuram)<br>2) Raw water Filtration | 1<br>1 | Rs.2000/-<br>Rs.1000/- | Rs.2300/-<br>Rs.1300/- | Rs.2500/-<br>Rs.1500/- |
| 3 | Charges for preparation for Autocad Drawing<br><u>Disposal Effluents</u> | 1 | Rs.1500/- | Rs.1800/- | Rs.1800/- |
| 4 | Charges for Preparation for Autocad Drawing<br>Topo Sketch of FSTP 30KLD Composed yard (4Nos) | 1 | Rs.500/- | Rs.600/- | Rs.700/- |
| 5 | Charges for Colour Printout (A2 Size – Rs.200/- per page) | 1 | Rs.200/- | Rs.230/- | Rs.250/- |

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 455 / அனுமதி வழங்கப்பட்டது**

பொருள் எண்:16

அம்பாசமுத்திரம் நகராட்சியில் முன்னர் செயல்அலுவலராகவும் தற்போது தஞ்சாவூர் மண்டல உதவி இயக்குநராகவும் பணிபுரியும் திரு.ப.குற்றாலிங்கம் அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 31.05.2020 அன்று பணி ஓய்வு பெறவிருப்பதால், அன்னார் பணிபுரிந்த காலத்தில் உள்ள தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்யும் பொருட்டு, தணிக்கைத் தடைகளில் உள்ள நபர்களின் காலங்கடந்த வைப்புத் தொகைகளில் (Lapsed Deposit) கீழ்க்காணும் விபரப்படியான தொகைகள் ஈடு செய்யப்பட்டுள்ளதை அங்கீகரிக்கவும், அதற்காக பின்னேற்பு வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>**தணிக்கை பத்தி எண்.25(ஆ)/2008–09**</u>

| வ. எண் | வைப்புத் தொகையாளரின் பெயர் | வரிசை எண் | டெபாசிட் செய்த நாள் | இருப்பிலுள்ள தொகை ரூ. | தணிக்கை தடைக்காக பிடித்தம் செய்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | எம்.கே.வாசுதேவராஜா | 1077 | 12.07.2007 | 750 | 750 |
| 2 | எம்.ராமகிருஷ்ணன் | 1313 | 27.05.2010 | 2140 | 1500 |
| 3 | ஆர்.எம்.நாகராஜன் | 1343 | 18.08.2010 | 1500 | 1500 |
| 4 | ஆர்.சங்கரலிங்கம் | 847 | 12.02.2005 | 1000 | 1000 |
| 5 | ஆர்.சங்கரலிங்கம் | 879 | 12.02.2005 | 770 | 500 |
| 6 | இ.பரமசிவன் | 1311 | 27.05.2010 | 2385 | 1500 |
| 7 | என். சந்திரசேகர் | 1370 | 26.10.2010 | 1555 | 1500 |
| 8 | பி.செல்லப்பா | 794 | 18.01.2016 | 1540 | 1500 |
| 9 | ஆர்.சங்குமுத்து | 1040 | 10.04.2007 | 770 | 770 |
| 10 | ஆர்.சங்குமுத்து | 1041 | 10.04.2007 | 200 | 200 |
| 11 | ஆ.கணபதி | 1173 | 05.09.2008 | 2300 | 1500 |
| 12 | கே.தியாகு | 1085 | 14.08.2007 | 1000 | 1000 |
| 13 | கே.தியாகு | 1044 | 10.04.2007 | 500 | 500 |
| 14 | பி.சங்கரலிங்கம் | 1386 | 13.08.2010 | 2000 | 1500 |
| 15 | என்.இசக்கி பாண்டியன் | 1172 | 05.09.2008 | 900 | 900 |
| 16 | என்.இசக்கி பாண்டியன் | 1182 | 12.01.2009 | 900 | 600 |
| 17 | கே.ராஜேஸ்வரன் | 795 | 18.01.2006 | 1030 | 1030 |
| 18 | கே.ராஜேஸ்வரன் | 801 | 14.02.2006 | 570 | 470 |
| | | | | **மொத்தம்** | **18220** |

**<u>தணிக்கை பத்தி எண்.26/2009–10</u>**

| வ. எண் | வைப்புத் தொகையாளரின் பெயர் | வரிசை எண் | டெபாசிட் செய்த நாள் | இருப்பிலுள்ள தொகை ரூ. | தணிக்கை தடைக்காக பிடித்தம் செய்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பி.சண்முக சுந்தரம் | 1495 | 07.07.2011 | 1750 | 1500 |
| 2 | ஆர்.எம்.நாகராஜன் | 1392 | 19.01.2011 | 4100 | 1500 |
| 3 | எ.சிக்கந்தர் | 1480 | 17.06.2011 | 2015 | 1500 |
| 4 | ஜி.அமலத்தாயம்மாள் | 1248 | 21.01.2010 | 5450 | 1500 |
| 5 | ஆர்.சங்கரலிங்கம் | 708 | 23.03.2005 | 900 | 900 |
| 6 | ஆர்.சங்கரலிங்கம் | 788 | 14.11.2005 | 1000 | 600 |
| 7 | என். சந்திரசேகர் | 1187 | 03.03.2009 | 5250 | 1500 |
| 8 | கே.பி.சண்முகம் | 1323 | 30.07.2010 | 2000 | 1500 |
| 9 | பி.சங்கரலிங்கம் | 1458 | 06.04.2011 | 1560 | 1500 |
| 10 | ஆ.கணபதி | 1460 | 03.05.2011 | 4905 | 1500 |
| 11 | யூ.மணி | 1483 | 07.07.2011 | 1500 | 1500 |
| 12 | இ.பரமசிவன் | 1319 | 15.07.2010 | 2500 | 1500 |
| | | | | **மொத்தம்** | **16500** |

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 456 / அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) <u>J.பிரேம்ஆனந்த்,</u>**
**தனிஅலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி